தேதி: 01.02.2023

வாக்குமூலம்
குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்
வழக்கு எண்.சிசி. 757/2022
வழக்கு சாட்சி எண். 1

| | |
|---|---|
| பெயர்: பேச்சியம்மாள் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் வரை ஆஜர். )
முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது முத்தாலங்குறிச்சியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன், நான் திருமணத்திற்கு பிறகு எங்களது பழைய வீட்டில் நான் எனது குடும்பத்துடன் வசித்து வந்தேன் . எனது வீட்டு அருகில் முத்தம்மாள் என்பவர் குடியிருக்கிறார். எனது பழைய வீட்டுக்கு முன்பாக காம்பவுண்ட்க்கு வெளியே கடந்த 04.06.2022 ம் தேதி இரவு 7.00-8.00 மணிக்குள் நல்லையா மகன் சுடலை மணி என்பவர் ரோட்டில் குறுக்கு அவரது இருசக்கர வாகனத்தை நிறுத்தி இருந்தார்.

2. எனது மகன் தங்கராஜ் சுடலைமணியிடம் சென்று எதற்காக உனது இருச்சக்கர வாகனத்தை குறுக்காக நிறுத்தி உள்ளதால் அதனை எடுக்க வேண்டும் என்று சொன்னார் . அப்போது சுடலை மணி இருசக்கர வாகனத்தை எடுக்க முடியாது என்று கூறி தேவடியா மவனே , புண்டமவனே என்று அசிங்கமாக பேசினார்.

3. அப்போது நல்லையா, அவரது மனைவி மணிமேகலா, மகள் செல்வ சுந்தரி , மகள் கிருஷ்ணவேணி , சுவேதா 5 பேரும் சேர்ந்து எனது மகனை அடிக்க வந்தார்கள்.

4. பிறகு மேற்படி நபர்கள் அனைவரும் கல்லை எடுத்து எனது மகன் தங்கராஜ் மீது எறிந்தார்கள் . அப்போது எனது சித்தி முத்தம்மாள் அங்கு வந்து மேற்படி நபர்களை பார்த்து ஏன் இவ்வாறு சத்தம் போடுகீறிர்கள் என்று கேட்டார்கள். மேற்படி நபர்கள் கல்லை எடுத்து எனது சித்தி மீது ஏறிந்ததில் எனது சித்திக்கு பல் உடைந்தது.

5. சுவேதா என் மீது கல்லை எடுத்து ஏறிந்தார். நான் சத்தம் போட்டேன். பிறகு எனது சித்திக்கு தண்ணீர் கொடுத்து திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் . எனது கணவர் சங்கரய்யா மற்றும் எனது மகன் தங்கராஜ் இருவரும் திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள்.

6. மருத்துவமனைக்கு கிளம்பி வரும் போது நல்லையா என்பவர் என்னை மறித்துக்கொண்டு கொலை மிரட்டல் விடுத்தார் . பிறகு மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

7. பிறகு நல்லையா மற்றும் அவரது குடும்பம் அனைவரும் சேர்ந்து நான் திருநெல்வேலி மருத்துவமனை உள் வராண்டாவில் வைத்து என்னை அடித்தார்கள். பிறகு செய்துங்கநல்லுரார் காவல் துறையினர் வந்து விசாரித்து வழக்கை எழுதிக்கொண்டு சென்றார்கள்.

8. நான் சொல்ல சொல்ல வாக்குமூலம் காவல் துறையினரால் பதியப்பட்டது. அப்போது எனது சித்தி பேசமுடியாத நிலையில் இருந்தார் . என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் . அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும்.

என்னை அடித்த நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள் . அதில் இரண்டு நபர்கள் வரவில்லை . அதில் காந்தி மகன் ராமன் , நல்லையா, சுவேதா வரவில்லை. மற்ற எதிரிகள் ஆஜர் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

9. எங்கள் குடும்பத்திற்கும் எதிரிக்குடும்பத்திற்கும் என்ன பிரச்சனை என்றால் முன்னமே பிரச்சனை உண்டு . 3 வருட காலமாக எனது மாமியாருக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான்.

10. எனது கணவரின் தாத்தா மற்றும் எதிரிகள் தாத்தா உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான் . சம்பவம்ந டந்தததாக சொல்லப்படும் இடம் எது வென்றால் எனது பழைய வீட்டு முன்பாக நடந்தது.

11. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் எனது பழைய வீட்டின் அருகில் யார் யார் வீடு உள்ளது என்றால் முத்தம்மாள் வீடு மட்டும் உள்ளது . முத்தலாங்குறிச்சி என்பது சிறிய கிராமம் ஆகும் . அதில் 100 வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

12. எங்கள் ஊரில் எத்தனை தெரு உள்ளது என்றால் ஒரே தெரு தான் உள்ளது. ஆனால் அதனை கடந்து பல நபர்கள் தங்களுக்கான இடத்தை தேர்ந்து எடுத்து தனித்தனியாக வீடுகள் கட்டியுள்ளனர். சம்பவ நேரம் இரவு 8.00 மணிக்கு மேல் இருக்கும் . அந்த இரவு நேரத்தில் இரு குடும்பமும் சண்டையிடும் போது எத்தனை நபர்கள் கூடியிருப்பார்கள் என்றால் அதனை நான் கவனிக்க வில்லை.

13. சம்பவம் நடந்த நேரத்தில் உள்ள வீடியோ நகல் உள்ளது . அந்த வீடியோ நகலை பார்த்தால் என்னால் யார் யார் என்று அடையாளம் சொல்ல முடியுமா என்றால் முடியாது. அந்த வீடியோ நகலை போலீசார்

மற்றும் சம்பவத்தை பார்த்த நபர்களுக்கு தெரியும் . அந்த வீடியோ ஆதாராத்தை பார்த்தால் நான் குற்றம் செய்ததாக தெரிய வரும் என்பதால் நான் அதனை பார்க்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

14.அப்படி ஒரு வீடியோ ஆதாரம் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . எனது பழைய வீட்டிற்கும் குடியிருக்கும் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 200 மீட்டருக்கும் குறைவாகத்தான் இருக்கும்.

15. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து 200 மீட்டர் தூரத்தில் எனது வீடு உள்ளது . ஆனால் அதற்கு இடைப்பட்ட தூரத்தில் சில நபர்களின் வீடுகளும் , முள் மரங்களும் உள்ளது என்றால் சரிதான்.

16. எனது முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் நான் போலீசார் விசாரிக்கும் போதும் சொன்னேன் என்றால் சரிதான் . சம்பவத்தால் ஏற்பட்ட காயத்தினால் எதிரிகள் தரப்பில் சுமார் 5 நபர்கள் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது.

17. எதிரி தரப்பில் இரு நபருக்கு தலையில் தையல் போடப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சாட்சி மீண்டும் எதிரிகள் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் இருந்தார்கள் என்றும் சொல்லி விட்டு தையல் போடப்பட்ட விபரம் தெரியாது என்றுதெரிவித்தார்.

18. நான் குடியிருக்கும் பகுதியில் எதிரிகளை காட்டிலும் எனக்கு சொந்த பந்தங்கள் அதிகம் என்றால் சரியல்ல . சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கு பிறகு எதிரிகள் அந்த ஊரில் இல்லை என்றால் சரிதான் . சம் பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு பிற்பாடில் இருந்து இன்று வரை ஆஜர் எதிரிகள் குடும்பத்தை சேர்ந்த நபர்கள் குடும்பமாக எங்கள் ஊரில் குடியிக்க இல்லை என்றால் சரிதான் . காரணம் என்ன வென்று எனக்கு தெரியாது.

19. நான் எனது பங்காளிகளுடன் சேர்ந்து எதிரிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்ததால் தான் அவர்களால் அந்த வீட்டில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு பிற்பாடு அங்கு குடும்பமாக வசிக்க இயலவில்லை என்றால் சரியல்ல.

20. முத்தம்மாள் என்பவர் எனது சித்தி ஆவார். அவர் இந்த சம்பவத்திற்கு பிறகு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக என்னுடன் எனது சித்தி வந்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் இடத்திற்கு பக்கத்தில் எனது சித்தி வீடும் உள்ளது என்றால் சரிதான்.

21. சம்பவம் நடந்ததற்கு பிறகு இருதரப்பும் சொந்தம் என்பதால் சமாதானம் போக முயற்சி நடந்ததா என்றால் சாட்சி மிரட்டினார்கள் என்று சொன்னார். எதிரிகள் என்னை மிரட்டவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் மற்றும் வகையறாக்கள் மூலமாக குறிப்பிட்ட ஒரு இடத்தை எங்களுக்கு தாராமல் அவர்களை எங்கள் ஊர் பக்கம் வந்தால் உயிருடன் செல்லமாட்டார்கள் என்று நாங்கள் தான் மிரட்டினோம் என்றால் சரியல்ல.

22. எதிரிகளுக்கும் எங்களுக்கும் உள்ள இடப்பிரச்சனை சம்மந்தமான இடம் எங்கு உள்ளது என்றால் எங்கள் பழைய வீட்டிற்கு முன்னால் உள்ளது. எதிரிகள் கழிப்பிடம் கட்டி அந்த இடத்தின் வழியாகத்தான் புலங்கிகொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். ஆனால் எதிரிகளுக்கு தெற்கு பார்த்து வாசல் விட நாங்கள் கூறியதை அவர்கள் ஏற்கவில்லை என்பதால் தான் எங்களுக்குள் இந்த பிரச்சனை நடந்தது என்றால் சரிதான்.

23. போலீசார் என்னை இதுவரை மருத்துவமனையில் வைத்து மட்டும் தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதற்கு பிற்பாடு என்னை எங்கு வைத்தும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

24. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் மற்றும் 20 நபர்களும் எதிரிகளின் வீட்டிற்குள் அத்துமீறி சென்று அவர்களை கொலை வெறி தாக்குதல் நடத்தி அதன் காரணமாக அவர்கள் குடும்பத்தில் இருந்த பெண் பிள்ளைகளும் தாக்கப்பட்டு அவர்கள் தான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார்கள் என்பதை தெரிந்து கொண்டு மேற்படி இந்த வழக்கில் இருந்து தப்பிக்கும் நோக்கத்தில் நானும் எனக்கு வேண்டிய எனது குடும்பத்தாரும் அவர்களுக்கு எதிராக இந்த பொய்யான புகாரை கொடுத்து இருக்கிறோம் என்றால் சரியல்ல.

25. நான் எனது வகையாறாக்களுடன் சென்று எதிரிகளை கற்கள், கம்பு , கட்டைகளால் தாக்கியதில் எங்களுக்குள் ஒருவருக்கொருவர் தள்ளிவிட்டு என்ன நடக்கிறது என்பதை கட்டுபாட்டை இழந்து எங்களுக்குள் ஏற்பட்ட காயத்தை எதிரிகளால் ஏற்பட்டது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

26. எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் மற்றும் எனது வகையாறாக்களின் மிரட்டலுக்கு பயந்து போய் தான் இன்று வரை எதிரிகள் எங்கள் ஊருக்கு குடும்பமாக வாழ வரவில்லை என்றால் சரியல்ல.

27. எதிரிகளுக்கும் எங்கள் ஊரில் சொத்துக்கள் , வயல்கள் உள்ளது என்றால் சரிதான் . சம்பவம் நடந்த தேதியில் இருந்து இன்று வரை எதிரிகள் மேற்படி சொத்துக்களை விட்டு எங்கோ போய் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

28. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை . எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 01.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண்.சிசி. 757/2022

வழக்கு சாட்சி எண். 2

| | |
|---|---|
| பெயர்: சங்கரையா | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

<u>( எதிரிகள் வரை ஆஜர். )</u>

<u>முதல் விசாரணை :</u>

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது முத்தாலங்குறிச்சியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன் , அ.சா.1 எனது மனைவி ஆவார் . கடந்த 04.06.2022 ம் தேதி இரவு 8.00 மணிக்கு மேல் நல்லையா மகன் சுடலை மணி என்பவர் பழைய வீட்டுக்கு முன்பாக இருசக்கர வாகனத்தை நிறுத்தி இருந்தார்.

2. எனது மகன் தங்கராஜ் சுடலைமணியிடம் சென்று எதற்காக உனது இருச்சக்கர வாகனத்தை நிறுத்தி உள்ளதால் அதனை எடுக்க வேண்டும் என்று சொன்னார். அப்போது சுடலை மணி இருசக்கர வாகனத்தை எடுக்க முடியாது என்று கூறி உன்னால் முடிந்ததை பார் என்று சொன்னார்.

3. அப்போது நல்லையா, அவரது மனைவி மணிமேகலா, மகள் செல்வ சுந்தரி , பெயர் தெரியாத இன்னொருவர் எனது மகனை அடித்தார்கள்.

4. அப்போது அங்கு வந்த அ .சா.1 யை சுடலைமணி , நல்லையா, மணிமேகலா, கிருஷ்ணவேனி, செல்வசுந்தரி ஆகியோர் அடித்தார்கள் . பிறகு எனது மனைவியை திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்தார்கள். பிறகு மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் . பிறகு செய்துங்கநல்லுரார் காவல் துறையினர் வந்து எனது மனைவி மற்றும் அத்தையை விசாரித்து வழக்கை எழுதிக்கொண்டு சென்றார்கள்.

5. போலீசார் மருத்துவமனையில் வந்து விசாரிக்கும் போது நான் மருத்துவனையில் தான் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான் . அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ. 2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

6. நான் சம்பவம் நடந்த பிறகு எத்தனை மணி நேரம் கழித்து அங்கு வந்தேன் என்றால் 5 நிமிடம் கழித்து வந்தேன் . என்னிடம் காட்டப்படும் கையெழுத்து எங்கு வைத்து போடப்பட்டது என்றால் மருத்துவமனையில் வைத்து போடப்பட்டது.

7. நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியும் . சம்பவ இடத்திற்கு நான் சென்று தான் எனது அத்தை மற்றும் எனது மனைவியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன்.

8. இரண்டு நபர்களையும், இரண்டு பைக்கில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எனது பைக்கில் எனது மனைவி வந்தார் . எனது சித்தி எனது மச்சினன் லெட்சுமனன் என்பவர் பைக்கில் வைத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றார் . இந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சம் பவ இடடத்திற்கு போலீசார் வந்த பிறகு தான் அவர்கள் தான் என்னையும் எனது மைத்துனையும் அழைத்து எனது மனைவியையும் எனது அத்தையும் , மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

9. எதிரிகள் எங்களுக்கு முன்னால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள் மற்றும் அவர்களையும் போலீசார் தான் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

10. எதிரிகளுக்கும் எங்களுக்கும் நடந்த பிரச்சனையில் யார் முதலில் மருத்து வமனை சென்றார்கள் என்றால் சாட்சி நான் எனது மனைவியை அழைத்து சென்றேன் என்று சொன்னார். எனது பழைய வீடு தரிசு நிலமா அல்லது வீடா என்றால் வீடு தான் உள்ளது.

11. பழைய வீடு பக்கத்தில் தான் எதிரிகள் புழங்கி கொண்டு இருக்கும் வீடு உள்ளது என்றால் எனது பழைய வீட்டிற்கு எதிர்புறம் அந்த இடப்பிரச்சனைக்குரிய நிலம் உள்ளது.

12. நான் சம்பவஇடத்திற்கு 5 நிமிடம் கழித்து வரும் போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 10 நபர்கள் இருந்திருப்பபார்கள் நான் கவனிக்கவில்லை.

13. எதிரிகளும் காயம்பட்டு மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றும் , அவர்களை யார் தாக்கினார்கள் என்றும் எனக்கு தெரியாது . எதிரிகள் குடும்பத்தில் உள்ள 2 பெண் நபர்களுக்கும் காயம் ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் அதனை பற்றி நான் விசாரிக்கவே இல்லை.

14. எதிரிகள் ஒரு வழக்கு எங்கள் மீது கொடுத்ததில் நானும் ஒரு எதிரியாக உள்ளேன் என்றால் சரிதான். நான் மற்றும் எனது வகையாட்கள் எதிரிகள் வீட்டீற்கு அத்துமீறி நுழைந்து சென்று அவர்களை தாக்கியதில் அவர்கள் மருத்தவமனைக்கு சிகிச்சைக்காக சென்ற விபரத்தை தெரிந்து கொண்டு அதில் இருந்து தப்பிக்கும் நோக்கில் எங்கள் வகையாட்களுக்குள் நடந்த தள்ளு முள்ளில் அடிபுடி தாக்குதலில் எங்களுக்குள் ஏற்பட்ட காயத்தை

அவர்கள் தான் ஏற்படுத்தினார்கள் என்று பொய்யாக ஒரு புகாரை ஏற்படுத்தி இருக்கிறோம் என்றால் சரியல்ல.

15. எனது மனைவி கூறிய வழக்கை ஆதரிக்க வேண்டும் என்னும் நோக்கில் தெரிந்து இருந்தே பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மற்றும் எனது வகையாட்கள் தான் எதிரிகளை தாக்கி காயம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல . எங்கள் மேல் இருக்கும் வழக்கை மறைப்பதற்காக அவர்களுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16. நான் சொன்ன மாதிரி மருத்துவமனையில் வைத்து அறிவேன் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல . காவல் நிலையத்தில் வைத்து வெள்ளைத்தாளில் நானும் எனது மனைவியும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /-
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 01.02.2023

வாக்குமூலம்
குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்
வழக்கு எண்.சிசி. 757/2022
வழக்கு சாட்சி எண். 3

| | |
|---|---|
| பெயர்: சுப்புத்தாய் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் ஆஜர். )
முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது முத்தாலங்குறிச்சியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். அ.சா.2 யைத்தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும், சம்பவம் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி சாட்சியை பிறழ் சாட்சி என குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

2. கடந்த 04.06.2022 ம் தேதி இரவு 8.00 மணிக்கு நல்லையா மகன் சுடலை மணி என்பவர் பழைய வீட்டுக்கு முன்பாக இருசக்கர வாகனத்தை நிறுத்தி இருந்தார் என்றால் எனக்கு தெரியாது.

3. அ.சா.1 னின் மகன் தங்கராஜ் சுடலைமணியிடம் சென்று எதற்காக உனது இருச்சக்கர வாகனத்தை நிறுத்தி உள்ளாய் அதனை எடுக்க வேண்டும் என்று சொன்னார் என்றால் எனக்கு தெரியாது . அப்போது

சுடலை மணி இருசக்கர வாகனத்தை எடுக்க முடியாது என்று கூறி உன்னால் முடிந்ததை பார் என்று சொன்னார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. எதிரிகள் தங்கராஜை பார்த்து தேவடியா மவனே என்றும் ,புண்டமவனே என்று கெட்டவார்த்தையால் பேசினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிறகு அதனை தட்டிக்கேட்ட அ .சா.1 மற்றும் முத்தம்மாள் இருவரையும் எதிரிகள் கையாலும் கல்லாலும் , மாறி மாறி அடித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. சம்பவத்தினால் அ .சா.1 மற்றும் முத்தம்மாளுக்கு உடலில் காயம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /-
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.